மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுமக்கள் குடியிருக்கிற அந்தப் பகுதியிலே உள்ள அந்த நிலத்தின் வகைப்பாடு, வருவாய்த் துறை ஆவணங்களில் குறிப்பிடப்படாமல் இருக்கிறது; ஆகவே, அந்த நிலத்தை நத்தம் நிலமாக வகைப்பாடு மாற்றம் செய்து அந்தப் பகுதி மக்களுக்கு பட்டா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். வருவாய்த் துறை, நிலை ஆணை எண் 21-ன் கீழேயுள்ள வரையறைக்குள் வருமேயானால், அதனைக் கொடுக்கலாம்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, அந்த நிலத்தின் வகைப்பாட்டினை ஆய்வு செய்வதற்கும் மாவட்ட நிருவாகத்திற்கு உடனடியாக அறிவுரைகள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

258—

தொழிற்பேட்டை

***1184—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்தில் SIDCO *தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

முற்பகல் 11-00

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நதியைப் போல நடந்துகொண்டிருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது) நதியானது பள்ளத்தை நோக்கிப் பாய்ந்து அதன் பகுதிகளை செழிப்பாக்கிவிட்டுத்தான் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மணி அடித்தால் என்னவென்று கேட்க வேண்டும்.*

பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நதியைப் போல நடந்து வருகிறார். நதியானது ஆர்ப்பாட்டம் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கும். அது எத்தனை தடைகள் வந்தாலும், அனைத்தையும் தாண்டிச் செல்லும். அது பள்ளத்தை நோக்கிப் பாய்ந்து, அந்தப் பகுதியை செழிப்பாக்கிவிட்டுத்தான் தனது பயணத்தைத் தொடரும். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அவர் பல தடைகளைத் தாண்டுகிறார். ஆனால், ஆர்ப்பாட்டம் இல்லாமல் இருக்கிறார். நேற்றையதினம், ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார். அது என்னவென்றால், காவேரியில் தமிழகத்தின் உரிமையான 31.24* TMC *தண்ணீரை வழங்க வேண்டும் என்று காவேரி மேலாண்மை வாரியம் வழங்கியுள்ள ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை இந்த அவையில் தெரிவித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எந்த ஓர் ஆர்ப்பாட்டமும் இல்லை; ஆரவாரமும் இல்லை. அவர் அமைதியான ஒரு ஞானியைப்போல் "என்னுடைய கடன் பணி செய்து கிடப்பதே" என்பதுபோல் இங்கு அமர்ந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) விளிம்புநிலை மக்களுக்காகப் போராடுகிற இந்த மாண்புமிகு முதலமைச்சருடைய அரசாங்கத்தில், விளிம்புநிலை மக்கள் நிறைந்திருக்கின்ற ராதாபுரம் தொகுதியிலிருந்து வந்திருக்கிறேன். என்னுடைய தொகுதியில் உழைப்பாளிகள், மாணவர்கள், தொழில் முனைவோர் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் பயன்பெற*

வேண்டும் என்பதால் ஒரு தொழிற்பேட்டை வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறேன். இந்த அரசு கேட்டதைக் கொடுக்கின்ற அரசு; விளிம்புநிலை மக்களுக்காகப் பாடுபடுகிற அரசு என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலித்து, ராதாபுரம் தொகுதிக்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, வடக்கு வள்ளியூர் கிராமத்தில் 16.75 ஏக்கர் நிலப் பரப்பில் 54 மேம்படுத்தப்பட்ட தொழில்முனையங்களுடன் ஒரு தொழிற்பேட்டையும், மேலும் அங்கு இரண்டாம் கட்டமாக, 23.16 ஏக்கர் நிலப் பரப்பில் 70 மேம்படுத்தப்பட்ட தொழில்முனையங்களுடன் ஒரு தொழிற்பேட்டையும், ஆக மொத்தம் 39.91 ஏக்கர் நிலப் பரப்பில் 124 மேம்படுத்தப்பட்ட தொழில் முனையங்களுடன் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில், 102 மேம்படுத்தப்பட்ட தொழில்முனையங்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. எஞ்சிய 22 தொழில்முனையங்கள் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளன. மேலும், திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் மற்றும் கிராமத்தில் SIDCO தொழிற்பேட்டை அமைப்பது குறித்து திருநெல்வேலி மாவட்ட நிருவாகத்துடன் SIDCO நிறுவனத்தால் கலந்தாலோசிக்கப்பட்டது. அதில் 15 ஏக்கருக்குமேல் பரப்பளவு கொண்ட அரசு புறம்போக்கு நிலங்களோ, தீர்வு ஏற்படாத இதர தரிசு நிலங்களோ அல்லது மேய்க்கால் புறம்போக்கு நிலங்களோ இல்லையென திருநெல்வேலி மாவட்ட நிருவாகம் தெரிவித்துள்ளது. எனவே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் பகுதியில் உகந்த நிலம் கிடைக்கப் பெறாததால், அங்கு SIDCO தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

2018 ஜூலை 3]

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவித்துள்ளார்கள். இங்கு காவல்கிணறு என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கு வேளாண்மைத் துறையின் சார்பில் ஒரு மலர் அங்காடி அமைக்கப்பட்டு தற்போது அது செயல்படாமல் பூட்டிக் கிடக்கிறது. அந்தப் பகுதியோடு இணைந்த பஞ்சாயத்திற்குச் சொந்தமான இடமும் இருக்கிறது. இந்த இரண்டையும் இணைத்து, அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்தால், அப்பகுதியிலிருக்கின்ற மக்கள் செழிப்படைவார்கள். தங்கள் வாழ்வில் ஓர் ஏற்றத்தைப் பெறுவார்கள் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடு மீண்டும் அதை வலியுறுத்தி, அதை அமைத்தே தீர வேண்டும் என்ற கோரிக்கையைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பாக வைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த மலர் அங்காடியைத் திறப்பதற்கு துறை ரீதியாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் அரசுப் புறம்போக்கு நிலங்கள் கிடைக்கின்ற நிலையில், தொழில் முனைவோர்களின் தேவையின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து, போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான புதிய SIDCO தொழிற்பேட்டை அமைப்பதற்குத் துறை ரீதியாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள், தனது தொகுதிக்குட்பட்ட வாழவந்தான் கிராமத்தில் புதிய தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வேண்டுகோளாக விடுத்திருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்த செங்கம் வட்டம், வாழவந்தான் கிராமத்தில் சர்வே எண் 52-ல், 6.50 ஹெக்டேர் தீர்வை ஏற்படாத தரிசு நிலம் மாவட்ட நிருவாகத்தினரால்

கண்டறியப்பட்டிருக்கிறது. SIDCO நிருவாகமும், மாவட்ட நிருவாகமும் கலந்தாலோசித்து, இப்பணி தொடர் நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர், திரு. க. சுந்தர் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், அண்ணாத்தூர் மற்றும் சிறுபினாயூர் கிராமத்தில் புதிய தொழிற்பேட்டை அமைப்பது குறித்து கோரிக்கை விடுத்திருக்கிறார். அதுசம்பந்தமாக மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, SIDCO நிருவாகம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர், திரு. சபா. ராசேந்திரன் அவர்கள் தனது தொகுதிக்குட்பட்ட பண்ருட்டி ஒன்றியம், காடாம்புலியூர் கிராமத்தில் ஒரு புதிய தொழிற்பேட்டை அமைப்பது சம்பந்தமாக காடாம்புலியூர் கிராமம் சர்வே எண் 642/3-ல், 13.95 ஹெக்டேர் கல்லாங்குத்து நிலப் பரப்பில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்காகக் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதுசம்பந்தமாகவும் மாவட்ட நிருவாகத்துடன், SIDCO நிருவாகம் தொடர் நடவடிக்கையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

259—

தமிழ் ஆராய்ச்சி பல்கலைக்கழகம்

***35486—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—